RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1357

# சங்க இலக்கியத்தில் நீர்நிலைகள் பாதுகாப்பு - ஓர் ஆய்வு

ச. சுபாஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்-610005, தமிழ்நாடு, இந்தியா

# A Study on Conservation of Water Bodies in Sangam Literature

S. Subash [a, *]

[a] Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur-610005, Tamil Nadu, India

* Corresponding Author: drssubashtamil@gmail.com

Received: 20-05-2022
Revised: 20-08-2022
Accepted: 02-09-2022
Published: 28-11-2022

Check for updates

## ABSTRACT

world that is equal to nature in human life. Location Water is one of the most important things for a human being to have food and clothing. If the fifties are in balance in the life of every man no harm will ever come to man. The structure of nature depends on the fifties earth, water, fire, air, and sky. Of It was the waters that were preserved during the Sangam period. Man cannot live without water. Poets have spoken about the nature of water in Sangam literary songs. When we look at the plight of farmers without rain today and the suffering of people without drinking water, the poets in the Sangam literature have said with a view to researching the water levels followed by the Palanthamil in the Sangam literature, the method of conserving water as well as water storage and seasoning. And the nature of rainwater, which is formed naturally, is one of the essential elements for every creative act of man. The purpose of this article is to examine the news about water through the footnotes of the ancient Tamil text.

**Keywords:** Sangam literature, Water Management, Water Storage, Rainwater

## முன்னுரை

நம் முன்னோர்கள் நீர் இருக்கும் இடத்தைக் கண்டறிந்து அங்கு விவசாயம் செய்தனர். குலம், குட்டை போன்றவற்றில் மழை நீரைச் சேகரித்து உழவு நிலங்களுக்கு வெயில் காலத்தில் பயன்படுத்தி வந்தனர். ஆனால் இன்று மழை இல்லாமல் உழவர்கள் படும்பாட்டையும், குடிக்க நீர் இல்லாமல் மக்கள் அவதிப்படுவதையும் பார்க்கும் போது வருத்தமாகவும் அதே சமயத்தில் நம் முன்னோர்களின் புத்திசாலித்தனத்தை நினைக்கும் போது இன்று வியக்கதக்கதாக இருக்கின்றன. நீர் நிலைகளைப் பாதுகாக்கும் முறைப் பற்றியும் அவற்றை எவ்வாறு பின்பற்றின என்பதனையும் இக்கட்டுரையின் வழி விரிவாக காண்போம்.

## ஐம்பூதங்கள்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையில் ஐம்பூதங்கள் சமநிலையில் இருக்குமாயின் எந்த விதமானப் பாதிப்புகளும், எப்போதும் மனிதனுக்கு வருவதில்லை. இயற்கையின் அமைப்பு ஐம்பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, வானம் என்பவற்றைச் சார்ந்தது. இங்கு மக்கள் நிலத்தை நிலமகள் என்றும் புவிமடந்தை என்றும் வழிபட்டனர் (Regina, 2020). திருமகள் பற்றி கூறுவதை,

"வரிறுதல் எழில்வேழம் பூநீர் மேல்சொரிதர

புரிநெகிழ் தாமரை மலர் அம்கண் வீறு எய்தி

திருநயந்து இருந்தன்ன தேம்கமழ் விறல் வெற்ப"

என கபிலர் கலித்தொகைப்பாடலடிகளின் வழியாகச் சுட்டுகின்றார் (Subramaniyan, 2009).

நீர் என்பதும் இயற்கையின் மற்றொரு முக்கியக் காரணியாகும். கடலைச் சேரும் ஆறுகளை எல்லாம் தெய்வமாக எண்ணி மக்கள் வழிபடுகின்றனர். மக்கள் ஆறுகளுக்கு பெயர் வைத்து கங்கை, யமுனை, நர்மதை, சிந்து, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை முதலியன ஆறுகளெல்லாம் தெய்வங்களாக வணங்கி வழிபாடு செய்து இருந்துள்ளன. கங்கையைத் தன் தலையில் சூடியவர் சிவன் என்பதை,

"அமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை அந்தணன்"

என்ற பாடலடியின் மூலமாகக் கலித்தொகைக் கூறுகின்றது (Subramaniyan, 2009).

## நீர் சேமிப்பு

சங்க காலத்தில் வாழ்ந்த நம் தமிழ் மக்கள் நீரின் இன்றியமையாமையை உணர்ந்து அவற்றைச் சேமித்து வந்துள்ளனர். திருவள்ளுவரும்

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்

வான்இன்று அமையாது ஒழுக்கு"

என்று நீரின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார் (Somasundranaar, 2004).

இன்றைய காலகட்டத்தில் வாழ்கின்ற மக்கள் தங்களின் தேவைகளுக்காகவும், பொருளாதாரத்ததை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும் மரங்களை வெட்டி அழிக்கின்றனர். இதனால் மழை வளம் குன்றிப் போய் பருவநிலை மாற்றத்திற்கு உள்ளாகின்றன. அதனால் வேளாண்மைத் தொழில் கேள்விக்குறி ஆகிவிட்டது. உழவர்கள் தற்கொலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். இச்சூழலில் இன்றைய அரசாங்கம் நீரினைச் சேமிக்கப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. இவற்றை நம் பண்டைத் தமிழ் மக்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைப்படுத்தியுள்ளனர் என்பதை சங்க இலக்கியத்தில் அறியலாம்.

"வையை உடைந்த மடையடைத்தக் கண்ணும்

பின்னு மலிரும் பிசிர் போல வின்னும்" (Somasundranaar, 2004)

"ஆறு குளம் நிறைக்குற போல அல்குலும்" (Venkatasami, 2008)

"ஊர் உண் கேணி உண்துறைத் தொக்க"

என்னும் பாடல் அடிகள் சங்க கால மக்கள் மடை, கால்வாய், குளம், கேணி உள்ளிட்டவை மூலம் நீரினைச் சேமித்து வந்துள்ளனர் என்பதை வெளிப்படுத்துகின்றன. இது பருவநிலை தப்பி வறட்சியான வாழ்க்கை உருவாகக் கூடும் என்ற முன்னெச்சரிக்கை சங்ககால மக்களிடம் இருந்துள்ளதையும் அவர்கள் பருவநிலையை நன்கு உணர்ந்து நீரினைச் சேமித்துள்ளனர் என்பதையும் மெய்ப்பித்துள்ளது (Somasundranaar, 2004).

## நீர்நிலைப் பாதுகாப்பு

நீர்நிலைகளை அழியாமல் இருப்பதற்குப் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். நீர்நிலைகளின் கரையழியாமல் இருக்க வேழக் கரும்பு என்றும் கொறுக்கச்சி என்றும் கூறப்படும் புல்லினை வளர்ப்பர். கொறுக்கந்தட்டு என்பதும் இதுவே. இது இக்காலத்து வழங்கும் பெயராகும். கரைக்கு வலிமை தருவது இது. புல்வகைகளில் இதுவும் ஒன்று. இதன் பூ வெண்மை நிறம் கொண்டது. கரும்புப் பூவின் வடிவு கொண்டது. இதன் பூவின் தோற்றம் குதிரையின்

தலைமயிரையும் உயரப்பரக்கும் குருகையும் போல விளங்கும். மூங்கிலைப் போல் இவை வீடுகட்ட பயன்படும். நீராடுபவர்க்கு இது புணையாய் அமைக்கப்படுவது உண்டு.

“பரியுடை நன்மான் பொங்குளை அன்ன

வடகரை வேழம்”

இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன (Subramaniyan, 2009).

## நீர்த்தேக்கப் பராமரிப்பு முறை

நீர்த்தேக்கங்களை அமைத்ததோடு மட்டுமல்லாமல் அந்நீர் நிலைகளிலுள்ள நீரை இரவு பகலென்று பாராது அதனை ஒழுங்குபடுத்தும் பணியிலும் காவலர்கள் இருந்தனர் என்பதைச் சங்கப் பாடல்கள் கூறுகின்றன. நீர் வரவு அதிகமானாலோ அல்லது அதிகக் கசிவு ஏற்பட்டாலோ, காவலர்கள் அதனை ஊர் மக்களுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துவர் என்றும், இதனைச் சரிப்படுத்தும் வகையாக ஊர்மக்கள் மணல் பைகளைக் கொண்டு கரையின் உயரத்தை உயர்த்துவர் என்றும் பரிபாடல் வரிகள் புலப்படுத்துகின்றன.

“வரைச்சிறை உடைந்ததை வையை வையைத்

திரைச்சிறை உடைத்தன்று கரைச்சிறை அறைக எனும்

உரைச்சிறைப் பறைஎழ, ஊர் ஒலித்தன்று”

ஏரி, குளம், நீர்த்தொட்டிகள் போன்ற நீர்த்தேக்கங்கள் நாளடைவில் பழுதடையும் பொழுது, அதன் கரைகளை உயர்த்துதல், நீர்க் கசிவுகளைச் சீர்படுத்துதல் என்றும், நீர்த் தேக்கங்களிலுள்ள நீர், வறட்சிமிக்க காலகட்டத்தில் அவற்றிலுள்ள பாசி, பழைய நீர் ஆகியவற்றை அப்புறப்படுத்திப் புதிய நீரை நிரப்புதல் ஆகியவையும் பராமரிப்புப் பணியாகும். சங்ககாலத்தில் நீரைச் சேமித்து அவற்றைத் தகுந்த முறையில் பாதுகாத்து வந்தனர் நம் சங்கத்தமிழர் (Subramaniyan, 2009).

## சுனைகள் நீர்

சுனை நீர் என்பது இயற்கை நீர் நிலைகளுள் ஒன்றாகும். மழைக்காலத்துப் பெய்த மழைநீரைச் சேமித்து வைக்கும் நீராதாரம் ஆகும். சுனையிலுள்ள நீரானது மலையின் வாழ்க்கை நடத்தும் விலங்கினங்களுக்கு அம்மழையின் நிறைந்த வகையில் உள்ளது. சுனையினது தோற்றம் கள்ளைப் பெய்த நீலக்குப்பிகளைப் போன்ற சிறிய வாயையுடைய சுனையின் கண் உள்ளனவாகிய பிளந்த வாயை உடையது.

“மட்டம் பெய்த மணிக்கலத் தன்ன

இட்டுவாய்ச் சுனை”

என பாடலடிகளின் மூலமாக அரிசில் கிழார் சுட்டுகின்றார் (Somasundranaar, 2004).

சிறுசிறு சுனைகள் பல மலைமீது காணப்படுவது எறும்புப் புற்றுப்போல் இருந்ததாகப் பாடலில் இடம் பெற்றுள்ளதை.

“எறும்பி அளையின் குறும்பல் சுனை”

என குறுந்தொகையின் பாடலடியின் மூலமாக ஓதலாந்தையார் காட்டுகின்றார் (Subramaniyan, 2009).

## இயற்கையரண்

வாழ்க்கைச் சூழலில் மரங்களை தம் வீட்டின் வேலியாகவும், ஊரைச் சுற்றியும் மக்கள் வளர்த்து வாழ்ந்து வந்தார்காள். இவ்வேலியான மரங்களை விலங்குகளிடமும். பகைவரிடமும் இருந்து

மக்களைக் காத்துக் கொண்டிருந்துள்ளன. மரங்கள் செறிவாக இருந்தமையால் நீர் வளம் எப்பொழுதும் குறைபடாது என்பதை அறிந்தன. சில பொழுதுகளில் நீரே மக்களின் இயற்கை வேலியாக இருந்ததும் இலக்கியத்தில் காணமுடிவதை.

"வேரல் வேலி சாரல் நாட

காந்தள் வேலி ஓங்குமலை நன்னாட்டு

கண்டல் வேலிக் கழிகுழ் படப்பை (Subramaniyan, 2009)

முண்டகம் வேய்ந்த குறியிறைக் குரம்பை

தெண்கடல் நாட்டுச்செல்வன் யான் (Narayanasamy, 1952)

முல்லை வேலி நல்லூரனே"

மேற்கண்ட பாடலடிகளின் மரங்களும் நீர்நிலைகளும் ஊருக்கு இயற்கையான வேலியாக இருந்த செய்திகளை புலவர்களின் வாயிலாக அறியமுடிகின்றன (Avvai Duraisamy pillai, 1996).

ஏரிகளும், குளங்களும் நிறைந்த மருதநிலத்தை நீர்ப்பாசனம் கொண்டு அழகு மிக்கதாகக் காணப்படும். நீர் நிலைகளில் நீர்த்தாவரங்கள் மிகுந்த காணப்படுகின்றன. நெடுநீர் பொய்கையும், நீர்ப்பொய்கையும் இருந்ததை,

"நறுவடி மாஅத்து விளைந்துரு தீம்பழம்

நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழுஉம் (Subramaniyan, 2009)

குண்டுநீர் அம்பல்"

என்னும் அடிகளின் மூலமாகப் பொய்கைப் பற்றியச் செய்திகளை அறியமுடிகின்றன (Somasundranaar, 2004).

உலகிற்கு வளமும் வனப்பும் வழங்குவன ஆறுகள். "பழந்தமிழ் இலக்கியத்தில் அடிக்கடி குறிக்கப்படும் ஆறுகளில் காவிரி, சேயாறு, வையை முதலியன சிலவாகும்" என்று பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை நூலின் மூலமாக மு. வரதராசன் கூறுகிறார் (Varatharasan, 1972).

## கடல் நீர்

கடலும், மணலும் பெரும்பகுதியாகக் கொண்டதே நெய்தல் நிலம், சங்க இலக்கியத்தில் கடற்கரை, சோலை, உப்பங்கழிகள், மரங்கள் முதலியவை பற்றிய செய்திகள் பேசப்படுகின்றன. அச்சமுடைய நாவாய் புலால் நாற்றம் வீசும் அலைகளை உடைய பெரிய கடல் நீரின் இடையே தவழ்ந்துக் கொண்டு போவதை அகநானூறு பாடல்களில் கூறியுள்ளார்.

"உலகுகிளர்ந் தன்ன உருகெழு வங்கம்

புலவுத்திரைப் பெருங்கடல் நீர்இடைப்போழ

இரவும் எல்லையும் அசைவுஇன்று ஆகி

விரைசெலல் இயற்கை வங்கூழ் ஆட்டக்

கோடுஉயர் திணிமணல் அகன்துறை நீகான்

மாட ஒள்ளரி மருங்குஅறிந்து ஒய்ய"

என மதுரை மருதனிளநாகனார் பாடலடிகளின் மூலமாகச் சித்திரிக்கின்றார் (Subramaniyan, 2009).

## முடிவுரை

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கை இயற்கையைச் சார்ந்தே நீர் இருக்கின்றது. மனிதனின் ஐம்பூதங்களின் கொண்டே தம் உடலில் வழியாக அறிந்துகொள்ள முடிகின்றன. இந்த ஐம்பூதங்களின் மிகவும் இன்றியாமையானது நீரும் ஒன்றாகும். கடவுள் முதல் கடல் வரை உள்ள வாழ்வியலை நீரின் கொண்ட தம் வாழ்வு பயணத்தில் முக்கியக்காரணிகள் உள்ளது. நீர்த்துறை தெய்வமாக வணங்கியும் அதற்கு பலிக்கொடுப்பதும் பழக்கவழக்கமாக இன்று வரையில் பண்பாட்டில் வழங்கியுள்ளதைக் காணமுடிகின்றது. சுனையானது மலைக்காலத்தில் உயிரினங்களும் காக்கக்கூடிய நீர் தேக்கத்தின் முக்கிய அங்கமாக உள்ளது. வாழ்க்கை சூழலியல் நீரைப்பாதுகாத்தும் தம் சுற்றுச் சூழலைக்காத்தும் வருவதைப் புலவர்களின் பாடலடிகளின் மூலமாக பழந்தமிழ் இலக்கியம் காட்டுவதை இக்கட்டுரையின் வாயிலாக அறியப்படுகிறது.

## References


Avvai Duraisamy pillai, S. (1996) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Narayanasamy Iyer, A. (1952) Natrinai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Regina, B. (2020). Environmental Awareness on Water in Eight Anthologies, International Research Journal of Tamil, 2(1), 1-42. https://doi.org/10.34256/irjt2011

Somasundranaar, P.V. (2004) paripadal Moolam Uraiyum, New Century Book House, Chennai, India.

Subramaniyan, S. V. (2009) Sanga Ilakkiyam Pathupattu, New Century Book House, Chennai, India.

Varatharasan, M. (1972) Palantamil Ilakkiyathil Eyarkai, Paari Niliyam, Chennai, India.

Venkatasami nattar, N.M. (2008) Agananooru, Ramaiya Pathipagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License